மாவீரன்

சந்திரமதி முதலியார்

வரலாறு



1

ஒட்டக்கூத்தர் பாடிய
'ஈட்டி எழுபது'

"கருதலர் பொடிபடக் கருதுங் குந்தமே
விருதுடைச் சூர்முடி வெட்டுங் குந்தமே
பொருதனிப் புலிக்கொடி புனையுங் குந்தமே
தருதலத் தருவெனத் தருஞ்செங் குந்தமே."

"மங்காத கீர்த்தி மறைநெறி யாற்றின் மனுமுறைகள்
பொங்கா நிற்பக் கவிச்சக்ர வர்த்தியெனத் திரைகள்
தொங்கா தவைதரச் சத்தியச் செங்கோல் சுமந்துசிரச்
சிங்கா தனத்திவர்ந் தாள்போர் செங்குந்தசிலாக்கியரே"

-செங்குந்தர் சிலாக்கிய மாலை

"தக்கோர்கள் வந்தசிவ சந்தான வழிகண்ட
மைக்கோல விழிமடவாள் மாடிருந்த நம்பரனார்
திக்கோர்கள் போற்று நவ திறல்வீரர் தமைவிளித்துக்
'கைக்கொள' ரென வழைத்தாள் கன்னியவள்
மகிழவன்றே"

கந்தபுராணம் - 6000

2

மாவீரன்
சந்திரமதி முதலியார்

எழுதியவர்

எம். மாரிமுத்து

ஆடிட்டர்,

145, மீனாட்சிசுந்தரனார் வீதி,

திருநகர் காலனி, ஈரோடு - 3.

0424 - 2210796, 2214779

3

ஈரோட்டை

அரசாட்சி செய்த

செங்குந்தன்

(02-09-1994ல்)

அமரரான

ஏ.கே.வி. மாணிக்கம் அவர்களுக்கு

காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன்

முதற் பதிப்பு - 1996

இரண்டாம் பதிப்பு - 2009

எழுதியவர்

எம். மாரிமுத்து

ஆடிட்டர்,

145, மீனாட்சிசுந்தரனார் வீதி,

திருநகர் காலனி, ஈரோடு - 3.

0424 - 2210796, 2214779

இந்த கல்வெட்டு
ஈரோடு வ.உ.சிதம்பரனார் பூங்காவில்
இருக்கிறது

இந்த கல்வெட்டைக் கண்டுபிடித்தவர்
ஈரோடு **எம்.மாரிமுத்து**
ஆடிட்டர்

விபஉளு கார்த்திகை பஞ்சமி (கி.பி.1628)
புண்ணியம் சந்திரமதி முதலியார் மடத்துக்கு
புஞ்சை இந்த தர்மத்தை அகுதம் பண்ணியவர்
கங்கை கரையில் காராம் பசுவைக் கொன்றதோர்
தோஷத்தில் சேர்வர்.

என்னுரையாக :

வீரர்களுக்கு
வணக்கம் செய்யாத இனமும், சமுதாயமும்
வளர்ச்சியடைவதில்லை.

கொங்கு மண்டல வரலாற்றில் இடம் பெற்றுள்ள நிலப்பிரபுக்களின் குடும்பத்தையும் காப்பாற்றி, அவர்கள் பெருமைக்கு காவலர்களாயுமிருந்தவர்கள் செங்குந்த வீரர்கள் தான்.
என்றாலும்,

செங்குந்த இனத்தின் வரலாற்றுச் செய்தி கொங்கு மண்டல வரலாற்றில் இடம் பெறாமல் திட்டமிட்டே மறைத்துவிட்டனர்.

அதற்கும்மேலாக, ஈரோட்டில் கோட்டை கட்டி கி.பி. 1628ல் ஆட்சி செய்தவன் செங்குந்த மன்னன். அவருடைய வரலாறு தமிழக வரலாற்றில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

செங்குந்தனுக்கு அவனையே அடையாளம் காட்டுவதற்காக இந்த சரித்திரச் சங்கலியை 50 ஆண்டுகளாக சேகரித்து வந்திருக்கிறேன். ஈரோடு வரலாற்றின் தொடர்புடையதாகையினால் ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோயிலைக் கட்டிய இரு பெண்மணிகளின் வரலாற்றையும் தனிக்கட்டுரையாக இணைத்திருக்கிறேன்.

இந்த நூலை எழுதுவதற்கு உற்சாகமளித்த கயிலைமணி. திரு. **அ. முனுசாமி** அவர்களுக்கும், இந்த நூலின் இரண்டாம் பதிப்பு வெளியிட உதவி செய்த **செங்குந்த மகாஜன சங்கத்திற்கு** எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஈரோடு,
21-09-2009

எம். மாரிமுத்து

ஈரோட்டை அரசாட்சி செய்த செங்குந்தன்

எழுதியவர் :
எம். மாரிமுத்து, பி.ஏ., பி.காம்., எச்.டி.சி.,

கொங்குமண்டலம் :

பெயர் வரக் காரணம் : ஒரு நாடு என்று சொல்வ தென்றால் அதற்கு வரையறுக்கப்பட்ட எல்லை இருக்க வேண்டும்.

அந்த நாட்டிற்கு அதை ஆண்ட ஆட்சியாளரின் ஆளுகையின் காரணமாக பெயர் வந்திருக்கலாம். முழுக்க, முழுக்க ஒரு இனத்தவர் மட்டும் வாழ்கின்ற பூமிப் பிரதேசம் என்பதால் பெயர் வந்திருக்கலாம். அபூர்வமான பூமிப்பிரதேசம் சிறப்பாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தட்ப வெப்பநிலையின் காரணமாகக் கூட பெயர் வந்திருக்கிறது.

தெய்வசிகாமணிக் கவுண்டர் கருத்து :

நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னனாக இருந்திருக்கலாமென்று கருதக்கூடிய ஒரு குறுநில மன்னன், தாராபுரத்திற்கு அருகில் அப்போதிருந்த 'கொங்கர்' என்ற ஊரில் ஆட்சி செய்தானாம். (அந்தஊரின் தற்போதைய பெயர்-நத்தம்) அந்த ஊரின் பெயரே இந்தப் பகுதிக்கு காரணப் பெயராகக் கொங்கு நாடு என்று வழக்கத்தில் வந்து விட்டது என்கிறார் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர். அந்த குறுநில மன்னன் பெயரோ, ஆட்சி செய்த காலமோ இந்த நூலில் குறிப்பிடப்படவில்லை.

> "கொங்கு நாடு என்பது கொங்கு என்னும்
> தலைநகரத்திலமைந்த பெயராகும் என்பது
> என்னுடைய கருத்து"

7

12-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்று கருதப்படும் வாலசுந்திரக் கவிஞர் எழுதிய கொங்கு மண்டலசதகம் என்ற நூலின் முன்னுரையில் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் இவ்வாறு கருத்து தெரிவிக்கிறார் (பதிப்பு -1971)

ஒரு குறுநில மன்னன் சிலகாலம் மட்டுமே ஆண்ட ஓர் ஊரின் பெயர் ஒரு நாட்டுக்கு வந்தது என்ற வாதத்தில் செரிவான காரணமில்லை. ஏனென்றால், 'கொங்கு' என்ற சொல் சங்க இலக்கியங்களிலே கூட காணப்படுகிறது. அந்த குறுநில மன்னன் ஆண்ட காலத்தில் வரையறுக்கப்பட்ட எல்லையில்லாத நாட்டிற்கு, நிலையான ஆட்சி இல்லாத பிரதேசத்திற்கு 'கொங்கு' என்ற பெயர் வந்ததற்கான ஒரே காரணமென்று ஏற்றுக் கொள்வதில் நிறைய முரண்பாடுகள் உள்ளன.

புலவர் அ.மு.குழந்தை :

'கொங்கு' என்ற சொல்லுக்கு மணம், வாசனை என்று அர்த்தம். மலைசூழ்ந்த மண்ணின் சுகந்த மணம் வீசும் பிரதேசத்தைக் கொண்டதால் அந்த பகுதிக்கு 'கொங்கு' என்ற பெயர் வந்திருக்கலாமென்கிறார் புலவர் அ.மு.குழந்தை. "கொங்கு நாடு என்னும் பெயர் இந்நாட்டுக்கு எப்படி உண்டானது ? பெயர்க் காரணம் என்ன ? 'கொங்கு' என்பது பூந்தாது, மணம், தேன், என்னும் பல பொருள்கள் ஒரு சொல். (பூந்தாது - மகரந்தம்) கொங்கு நாடு முழுவதும் மலைத் தொடரும், பெருமலையும், சிறுமலையும், குன்றுகளும் மிகுந்துள்ளன எனவே பண்டு நாடெங்கும் மரம், செடி, கொடிகள் மிகுந்து தழைத்துப் பூத்து மணங்கமழ்ந்ததனாலும், தேன்மிகுதியாக இருந்தக் கொங்கு நாடு என்று பெயர் வைத்தனர்".
(பக்கம் -18)

அவர், தாம் எழுதிய 'கொங்கு நாடும் தமிழும்' (பதிப்பு -1956) என்ற நூலில் உள்ள இந்தக் கூற்றின்

அணுகுமுறையை புரிந்து கொண்டால் அவர் காரணம் பொருத்தமானதென்று ஒப்புக்கொள்ள முடிகிறது. எனினும், 'நம்முன்னோர்கள்' என்று கூறி குழப்பி இருக்க வேண்டியதில்லை.

சங்க காலத்திலிருந்து பேசப்படும் 'கொங்கு' என்ற சொல், தமிழ்நாட்டின் ஒருபகுதிக்கு பெயராக வந்ததற்கு இயற்கைச் சூழ்நிலையின் காரணப் பெயராகத்தான் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட எந்த ஒரு ஜாதியின், எந்த ஒரு காரியத்தாலும் 'கொங்கு' என்ற பெயர், தமிழ் நாட்டின் இந்த பகுதிக்கு 'கொங்கு நாடு' என்று வரவில்லை. மாறாக கொங்கு நாட்டில் வாழ்ந்த மக்கள் அனைவரையுமே 'கொங்கர்' என்றுதான் அழைத்தார்கள்.

மயிலை சீனி வேங்கடசாமி :

"கொங்கு நாட்டு வரலாறு
பழங்காலம் - கி.பி. 250 வரையில்"

என்ற தமது நூலில் இந்த நூலின் ஆசிரியரான சீனி வேங்கடசாமி கூறுகிறார் :

"இவ்வளவு குறைபாடுகள் உள்ள நிலையில் கொங்கு நாட்டின் பழைய சரித்திரத்தை எழுத வேண்டியிருக்கிறது. இப்போது கிடைத்துள்ள ஒரே கருவி சங்க இலக்கியங்கள் மட்டுமே"

என்கிறார்.

"அக்காலத்தில் கருவூர் (தற்போதைய கரூர்)
கொங்கு நாட்டின் தலைநகரமாக
இருந்தது" (பக்கம் -13)

எனவே, கி.பி. 250 வரையுள்ள கொங்கு நாட்டின் வரலாறு தெளிவாக வரையறுக்கப்படவில்லை; ஏட்டில் எழுதப்படவில்லை என்றாகிறது.

செல்வி டி. கே. சக்திதேவி, எம்.எஸ் சி., எம் ஃபில்.,

செல்வி டி.கே.சக்திதேவி என்பவர், 'கொங்கு வெள்ளாளர்' என்ற நூல் எழுதியிருக்கிறார். (பதிப்பு-1974). "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதிய டாக்டர் கால்டுவெல் பாதிரியார் 'குடகு' என்னும் சொல்லைப் போலவே கொங்கு என்னும் சொல் விளைவு, திருப்பம் என்னும் பொருளுடையது. அந்நாட்டின் தோற்றத்தின் இயல்பு நோக்கி ஏற்பட்ட பெயர்" எனக் கூறியுள்ளார் (பக்கம் - 21).

"கொங்கு செட்டி, கொங்கு முதலி, கொங்கு சாணான், கொங்கு பறையன் ஆகிய கொங்குக் குடிகள்" (பக்கம் -26) என்று இந் நூலாசிரியரே கூறுவதிலிருந்து கொங்குநாட்டில் வாழ்ந்த அனைவரும் கொங்கர் என்றுதான் அழைக்கப்பட்டார்கள் என்று முடிவாகிறது.

எனவே நாட்டின் பெயர் அதில் வாழும் அனைத்து மக்களுக்கும் காரணமாக ஆகிவந்ததேயன்றி, அதில் வாழும் மக்களின் பெயர் அந்த நாட்டுக்கு "கொங்கு நாடு" என்று ஆகிவிடவில்லை என்பது தெளிவு.

வெள்ளாளர் என்றால் இப்படியும் ஒரு அர்த்தம் :
(சுபமங்களா-மே 1995 (பக்கம் -14))

தமிழவன் நேர்காணல் :

தமிழவன் நேர்காணல் என்ற தலைப்பில், தமிழவன் கூறுவதனாயும் தெரிந்து வைப்போம்.

"அதைப் பின்னாடி ஒரு எலெக்ஷனுக்காக ஒரு உத்தியா மாத்தினபோது குறிப்பிட்ட சில வர்க்கங்கள், ஜாதிகள், சமூகங்கள் அதை தங்களுடையவையாக மாற்றிக் கொண்டன."

"உதாரணமாக தலித்துகளல்லாத வெள்ளாளர்" (இது ஒரு குறிப்பிட்ட ஜாதியாக இல்லை. தலித்துகளை பிராமணர்களைப் போல நாமும் அடிமைப்படுத்தப் இருந்த

10

படலாம்ங்கற 'ஹைரார்க்கி' மனோபாவம் கொண்ட எல்லா விதமான ஜாதிக்குமான ஒரு அடையாளச் சொல்.)

கொங்குநாட்டின் எல்லை :

வரையறுக்கப்படாத எல்லையையும், காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டு வந்ததுமான நிலப்பகுதியை எல்லையாகக் கொண்டிருந்தது 'கொங்கு மண்டலம்'. இது தமிழ்நாட்டின் நடுப்பகுதியில் அமைந்திருந்தது இதற்கொரு காரணமெனலாம். எனினும், கொங்கு நாட்டின் எல்லையை இவ்வாறு கூறலாம்.

'கொங்கு நாடு'

"கோவை, நீலகிரி, சேலம் கோட்டங்களும், திருச்சி, மதுரை கோட்டங்களின் வடபகுதியும், கொங்குநாடு எனப்படும் மதுரைக்கோட்டத்திலுள்ள பழனியும், திருச்சிக் கோட்டத்திலுள்ள குளித்தலையும் கொங்கு நாட்டில் தெற்கெல்லையாகும்" என்கிறார் புலவர். குழந்தை (பக்கம் - 17) "கொங்கு நாடும் தமிழும்" என்ற நூலில்.

கோவை மாவட்டம் பிற்காலத்தில் பெரியார், கோவை மாவட்டங்களாக 1979-ல் பிரிக்கப்பட்டது.

கொங்குமண்டலத்தை ஆட்சி செய்தவர்கள் :

தமிழக வரலாற்றில், கொங்கு மண்டலத்தை ஆண்ட மன்னர்கள், குறுநில மன்னர்கள் பற்றி கோர்வையாக தெளிவாகக் கூறுவதற்கு இல்லை.

கி.பி. 7-ம் நூற்றாண்டு வரையில், சில காலம் கொங்கு மண்டலத்தை சில மன்னர்களும், முக்கியமாக சேர சோழ, மன்னர்களும் பல காலம் இந்த மன்னர்களால் பட்டயம் பெற்றவர்களும் ஆங்காங்கே சில சில பகுதியை ஆண்டு வந்திருக்கிறார்கள்.

12-ம் நூற்றாண்டு வாக்கில், கொங்கு நாடு 24 உட் பிரிவுகளாக வகுக்கப் பட்டு தனித்தனி எல்லைக்குள்

பகுதிகளாக வெவ்வேறு பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டது. இதற்கு ஏராளமாக இலக்கியச் சான்றுகளும், குறுநில மன்னர்களின் பட்டயம் மற்றும் கல்வெட்டுச் சாசனங்களும் இருக்கின்றன.

அந்த 24 நாடுகளில் பூந்துறை நாடு என்று ஒரு பகுதிக்கும் பெயரிருந்தது. அது தற்போது ஈரோட்டுக்கு அருகிலுள்ள பூந்துறை என்ற ஊரும் அதைச் சேர்ந்த பகுதியுமாகும்.

இந்தப் பூந்துறை நாட்டைச் சுற்றி சிறுசிறு கிராமங்கள் தோன்றின.

ஈரோடை :

இவ்வாறு தோன்றிய கிராமங்களுள் குறிப்பிடத் தக்கது 'ஈரோடை' என்ற கிராமமாகும். ஈரோடை என்ற பெயர்தான் பிற்காலத்தில் ஈரோடு என்று மறுகி வழக்கத்தில் வந்து, 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வாலசுந்தர கவிஞர் எழுதிய 'கொங்கு மண்டல சதகத்தில்' இவ்வாறு கூறப்படுகிறது.

"சீரிய செங்கமலாய மேவுந் திருவெழின்மிக்
காரிரு வோருடன் கூடிக் கலந்தங் கவர் பொருட்டாற்
போரியல் வேல்விழி யிற்தாரணி நாயகன் பொன்னொடுபூ
மாரிபொழிந்தது மீரோடை சூழ்கொங்கு மண்டலமே".

ஈரோட்டில் கோட்டை :

கி.பி. 17 ம் நூற்றாண்டில் ஈரோட்டில் ஒரு கோட்டை கட்டப்பட்டது மன்னனால் கட்டப்பட்ட அந்தக் கோட்டையைச் சுற்றி அகழிஇருந்து. கோட்டை உருவான காலத்திற்குப் பிறகுதான் ஈரோடு, தமிழ்நாட்டின் அரசியல் ஆட்சியில் முக்கிய ஊராக மாறியது . ஈரோட்டைச் சுற்றி போர் வீரர்களின் நடமாட்டமும், வர்த்தகப் பரிவர்த்தனையும் பெருகி வளர்ந்தது.

12

இந்தக் கோட்டையை கட்டியவன் ஒரு செங்குந்தன் அவன் பெயர் சந்திரமதி முதலியார் என்பதாகும்.

கொங்கர்களைக் காத்தவர் செங்குந்த வீரர்களே :

கொங்கு நாட்டில் அடிக்கடி மன்னர்கள் படையெடுப்பு நடந்து வந்திருக்கிறது; அந்தக் காலத்தில் கொங்குப் பிரதேசத்தில் வாழ்ந்த பிற்காலத்தில் மன்றாடியார்களென்றும், பட்டக் காரர்களென்றும், பட்டம் சூட்டப்பட்டவர்களும், இந்தப் போரில் அரசர்களுக்கு தங்கள் சேனைகளைக் கொடுத்து உதவினார்கள்.

தங்கள் குடும்பத்தைக் காப்பதற்கும் சேனையை எப்போதும் தயார் நிலையில் வைத்திருந்தார்கள்.

இவர்களுடைய சேனையில் இருந்த அனைவரும் செங்குந்தர்களே ஆகும்.

காஞ்சிபுரத்தின் பகுதியிலிருந்தும், நாட்டின் மற்றைய பகுதியிலிருந்தும் செங்குந்த வீரர்களை வர வழைத்து, தங்கள் சேனையை உருவாக்கி, தங்களை இவர்கள் பாதுகாத்துக் கொண்டார்கள்.

உலகுடைய மன்றாடி என்ற பட்டம் ஏந்தி, பூந்துறை நாட்டை ஆண்ட காலிங்கராயன், செங்குந்தர்களைக் காஞ்சி மாநகரிலிருந்து கொங்கு நாட்டுக்குக் குடியேற்றி அவர்களைக் கொங்கர்களாக மாற்றி தன் படை அணிகளில் போர் வீரர்களாக்கிக் கொண்டான், கொங்கு முதலியின் பட்டயப் பாடல் ! அதில்,

"ஆதி முதல் செங்குந்தர் அதில் வந்த கொங்கனுக்கு
சாதி, குலம், கல்யாணம் தனது முறைப்படியாக
நீதியுடன் எந்நாளும் நிலைத்திருக்க வேண்டுமென
ஓதி வைத்தான் பூந்துறை நாட்டு உத்தமனே."

என்று சாட்சியாகக் கூறுகிறார் (பக்கம் -26) செல்வி டி.கே. சக்திதேவி தான் எழுதிய 'கொங்கு வெள்ளாளர் வரலாறு' என்ற நூலில்.

(பக்கம் -27) அவரே, "கொங்கு நாட்டில் முன்னாளில் கொங்கு வெள்ளாளரே மிகப் பெருன்மையான மக்களாக வாழ்ந்து வந்தார்கள், பிற்காலத்தில் பல நாட்டு மக்களும் அந்நாட்டில் குடியேறினார்கள்." என்கிறார்.

ஈரோட்டை ஆண்ட செங்குந்த மன்னன் :

படை வீரர்களாக கொங்கு நாட்டுக்கு வந்தவர்களில் செங்குந்தர்கள் சேதுபதியாக மாறினார். சிலர் குறுநில மன்னர்களாக செல்வாக்குப் பெற்றனர். அவர்களில் ஒரு செங்குந்தன் ஈரோட்டில் ஒரு (மண்) கோட்டையைக் கட்டினான். ஈரோட்டை ஆண்டான்.

ஈரோட்டில் கோட்டை கட்டி ஆண்ட செங்குந்த மன்னனின் பெயர் **சந்திரமதி முதலியார்** என்பதாகும்.

அரண்மனையும் கோட்டையும் :

தற்போது சூரம்பட்டி உள்ள பகுதியில் சந்திரமதி முதலியார் என்ற மன்னரின் அரண்மனை இருந்தது.

தற்போது ஈரோட்டில் மேட்டூர் ரோடு (ஈ.வி. நஞ்சப்பா ரோடு) பகுதியில் கோட்டை இருந்தது.

இன்றைய புது பஸ்நிலையம் பகுதிதான் போர் வீரர்கள் பயிற்சி பெறும் மைதானமாக இருந்தது.

இன்றைய வ. உ. சிதம்பரனார் பூங்காதான் மன்னரும், சேனாதிபதிகளும் ஓய்வெடுத்துக்கொள்ளும் பூங்காவாயிருந்து.

நாயக்க மன்னருடன் மோதல் :

கி. பி. 1623 முதல் 1659 வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த திருமலை நாய்க்க

மன்னருடன் நடந்த போரில் சந்திரமதி முதலியார் என்ற செங்குந்த மன்னன் தோற்றுப் போனான். கோட்டை கைப்பற்றப்பட்டது. அவனுடைய அரண்மனை இடித்து தரைமட்டமாக்கப்பட்டது அவனுடைய வாரிசுகளும் சந்திரமதி முதலியாரும் கொல்லப்பட்டனர். சந்திரமதி முதலியாரின் வாரிசுகள் யாருமே தமிழ் நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

கி. பி. 1628 ல் ஈரோட்டை ஆண்ட செங்குந்தரரான சந்திரமதி முதலியார் வம்சம் வாழ்ந்தது இன்றைக்கு 361 ஆண்டுகளுக்கு முன்புதான் (1628-1995) என்றாலும் சரித்திர ஆதாரங்கள், இலக்கிய ஆதாராங்கள் கல்வெட்டு ஆதாரங்களத் தவிர வேறு நிதர்சனமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

கர்னல் மெக்கன்ஸி என்பவர் கொங்கு நாட்டில் வாழ்ந்த குறுநில மன்னர்கள், மன்றாடியார்கள், பட்டக் காரர்களைப் பற்றி விரிவான குறிப்பு எழுதிவைத்தான், அது தொல்பொருள் ஆவண காப்பகம் சென்னையில் இருக்கிறது.

செங்குந்த இளைஞர்கள் யாராவது சென்னை எழும்பூரிலுள்ள தொல்பொருள் காப்பகத்தில் சந்திரமதி முதலியார் வரலாற்று ஆதாரமான தடயங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

சந்திரமதி முதலியார் என்ற செங்குந்த மன்னன் ஈரோட்டை ஆண்ட வருடம் கி.பி. 1628-ம் ஆண்டு ஆகும்.

மன்னர் சந்திரமதி முதலியும் இராமப்பையயன் அம்மானையும் :

மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட, திருமலை நாயக்கர் காலம் கி.பி. 1623-1659 ஆகும். அவனுடைய முதன் மந்திரியும்; சேனைத் தலைவனுமாக இருந்தவன் பெயர் இராமப்பையன்;

திருமலை நாயக்கன் காலத்தில் இராமநாதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னன் பெயர் சடைக்கன் சேதுபதி (கி.பி. 1635-1645) திருமலை நாயக்கன் சடைக்கன் சேதுபதி மீது கி.பி 1639-ம் ஆண்டு போர் தொடுத்தான் தளபதி இராமப்பையன் தலைமையில் போர் நடந்தது.

இந்த போரில் தங்கள் சேனையுடன் பங்கு கொண்ட அரசரான புதுக்கோட்டை தொண்டைமான்; சிவகங்கை உடையாத் தேவன்; ஆகியோரும் மற்றும் 72 பாளையக்காரர்களும், அதுவன்றி முகமதியர் கூலிப்பட்டாளமும், பரங்கியர் கூலிப்பட்டாளமும் பங்கு கொண்டனர். இந்தப் போரையும், அதன் தொடர்பான செய்திகளும், பங்குகொண்ட மன்னர்கள் பெயரையும் பாளையக்காரர் பெயரையும் இந்த அம்மானை கூறுகிறது. இந்த நூலின் பெயர் இராமப்பையன் அம்மானை என்பதாகும்.

இராமப்பையன் அம்மானையின் ஓர் ஏட்டுச் சுவடி தஞ்சை, சரபோஜி மன்னன் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ளது. இதில் 300 அடிகளே உள்ளன. மற்றும் இரு சுவடிகள் சென்னையிலுள்ள ஓரியண்டல் மேன்ஸ்கிரிப்ட் (Oriantal Manscript) நூல் நிலையத்தில் உள்ளது. இவைகள் முழுமையாக உள்ளன இதன் பெயர் இராமைய்யன் அம்மானை என்றிருக்கிறது. சரசுவதி மகால் நூலகத்திலுள்ள ஏட்டுச் சுவடியில் ஈரோட்டில் "கோட்டை" ஒன்று இருந்தது என்று குறிப்பிடப்படுகிறது. (பாடல் வரி -300).

ஈரோட்டில் ஆட்சி செய்தவன் ஒரு "கொடி மன்னர்" என்றும் இந்த அம்மானைக் குறிப்பிடுகிறது. (பாடல் வரி -298)

இந்த அம்மானை கி.பி. 17-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவர்களைக் குறிப்பிடுகிறது.

ஈரோட்டில் கி.பி. 17-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மன்னன், சந்திரமதி முதலியார் என்ற செங்குந்தனைத் தவிர ஈரோட்டில் வேறு கொடி மன்னர்யாருமில்லை என்பதும், அவன் கட்டியதுதான் ஈரோட்டில் இருந்தகோட்டை என்பதும் இந்த இராமப்பையன் அம்மானை சான்று கூறுகிறது.

ஈரோட்டை ஆட்சி செய்த செங்குந்த மன்னன்

படைவீரர்களாக கொங்கு நாட்டுக்கு வந்தவர்களில் செங்குந்தர்களில் சிலர் சேனாபதிகளாக மாறினார்கள். சிலர் குறுநில மன்னர்களாக செல்வாக்குப் பெற்றனர். அவர்களில் ஒரு செங்குந்த மன்னன், ஈரோட்டில் ஒரு (மண்) கோட்டையை கட்டினான். ஈரோட்டை ஆண்டான். அவன் பெயர் சந்திரமதி முதலியார் அவன் பாளைக்காரனல்ல, அவன் மன்னன்; மதுரை திருமலை நாயக்கனுக்கு கீழ்படியாதிருந்தவன், அந்த மதுரை மன்னனுக்கு கப்பம் கட்டாதிருந்தவன்.

விஜயமங்கலம் : கார்மேகக் கவிஞர் :

1923-ல் திருச்செங்கோடு தி அ முத்துசாமிக் கோனாரால் பதிக்கப்பட்ட கொங்குமண்டல சதகம் என்றொரு நூல் உண்டு. அதை எழுதியவர் விஜயமங்கலத்தில் வாழ்ந்த கார்மேகக் கவிஞர் என்பவர். இந்நூலாசிரியரின் காலம் கி.பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம் இந்த நூலில் சில சரித்திரச் செய்திகள் சொல்லப்படுகின்றன. அவைகளை இலக்கியப் போக்கான ஆதாரங்கள் என்று கருத இடமிருக்கிறது.

இந்நூலில் பாடல் 66-ல் 'சம்பந்த சர்க்கரை தமிழ்ப்புலவனுக்கு தாலி கொடுத்தது' என்ற தலைப்பில் ஒரு பாடல் வருகிறது இந்த பாடலிலிருந்து யூகிக்கப்படும் சரித்திரச் செய்தி ஒன்று உண்டு.

மதுரை திருமலை நாயக்கனின் தளபதி ராமப்பையன் ஈரோட்டில் முகாமிட்டு இருந்தான்.

17

சுற்றுவட்டாரத்திலுள்ள மன்றாடியார்களும், பட்டக்காரர்களும், அவனுக்கு கப்பம் கட்டினார்கள் என்பதும், அவ்வாறு கப்பம் கட்ட மறுத்தவர்களை சங்ககிரியில் இருந்த சிறையில் அடைத்து சித்திரவதை செய்தானென்பதுமாகும்.

இந்த காலகட்டத்தில்தான் அதாவது கி.பி. 1628-ம் ஆண்டில் தான் ஈரோட்டை சந்திரமதி முதலியார் அரசராக ஆட்சி புரிந்து வந்தார். தளபதி ராமப்பையனுக்கு கீழ்படிய மறுத்ததனால், போர் புரிந்து மாண்ட ஒரே மன்னனும், ஈரோட்டு சந்திரமதி முதலியார் தான் என்பது முடிவாகிறது

எனவே 1628-ல் தான் ஈரோட்டில் முதல் போர் நடந்திருக்கிறது. அதில் ராமப்பையனால் கொல்லப்பட்டவர் மன்னர் சந்திரமதி முதலியார் என்றாகிறது.

2. கோவைக்கிழார் :

கோ. ம. இராமசந்திரன் செட்டியார் :

கொங்கு நாட்டு வரலாற்றை வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் தக்க சான்றுகளோடும் எழுதியவர் கோவைக்கிழார். கோ.ம. இராமசந்திரன் செட்டியார் மட்டுமேயாகும். அவர் எழுதிய 'கொங்கு நாட்டு வரலாறு' என்னும் நூலிலும் (பக்கம்-349) ஈரோட்டில் ஒருகோட்டை இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

என்றாலும், இந்த கோட்டையைப் பற்றிய பிற செய்திகள் இடம் பெறவில்லை முதற்பதிப்பின் முன்னுரையில் (பக்கம் -11) அவரே இவ்வாறு கூறுகிறார்.

"கொங்கு நாட்டு வரலாற்றை வெளியிடுவது மிகவும் கடினம் கணக்கற்ற நூல்களைப் புரட்டிப் பார்க்க வேண்டும். ஒவ்வொன்றிலும் சிறிதளவே வேண்டிய செய்திகள் கிடைக்கும் கொங்கு நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள் முழுவதும் எடுக்கப்படவில்லை. எனவே செய்திகளைத் திரட்டுவது என்றால் மிகவும் கடினம்". இந்த நூல் வெளியிடப்பட்டது 1987-ம் ஆண்டு ஆகும்.

ஈரோட்டில் நடந்த நான்கு போர்கள் :

சரித்திரத்தில் இடம்பெற்ற நான்கு போர்கள் ஈரோட்டில் நடந்துள்ளன. முதல் போர் கி.பி. 1628-ம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்றது இது அப்போது மதுரையை அரசாட்சி செய்த, திருமலை நாயக்கர் மன்னருடைய சேனாபதி இராமப்பையனுக்கும், அப்போது ஈரோட்டில் கோட்டையைக் கட்டி ஆட்சி செய்த மன்னராகிய, செங்குந்தராகிய, சந்திரமதி முதலியாருக்கும் நடந்தது. இந்தப்போரில் சந்திரமதி முதலியார் கொல்லப்பட்டார்.

வ.உ.சிதம்பரனார் பூங்காவிலுள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள வருஷம் கி.பி. 1628 (கார்த்திகை மாதம்) கல்வெட்டிலுள்ள மன்னர் பெயர் சந்திரமதி முதலியார் என்பதாகும். முதல் போர் ஈரோட்டில் நடந்த வருஷமும் கி.பி. 1628 தான்.

இரண்டாவது போர் கி.பி. 1656-ல் ஈரோட்டில் மதுரை நாயக்க மன்னருக்கும் மைசூர் அரசர் தொட்ட தேவராயனுக்கும் நடந்தது. இப்போரை 'மூக்கறுப்பு போர்' என்பர்.

கி.பி. 1659-ல் மதுரை அரசனுக்கும் மைசூர் மன்னர் கந்தர்வ நரசராஜா் படைகளுக்கும் ஈரோட்டில் போர் நடந்தது.

நான்காவது போர் கி.பி. 1790-ல் திப்பு சுல்தானுக்கும், ஆங்கிலேய தளபதி கர்னல்மெடோசுக்கும் ஈரோட்டில் போர் நடந்தது. கோட்டை ஆங்கிலேயர் வசமாகிறது. பின்னர் ஈரோட்டில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது.

ஈரோடு கோட்டையைக் கட்டியவர்கள்
செங்குந்தர்கள் :

ஈரோட்டில் இருந்த கோட்டையை எந்த ஒரு சிற்றரசரோ, மன்றாடியார்களோ பட்டக்காரர்களோ கட்டியதாக வரலாற்று ஆதாரம் இல்லை. அவர்களின் அரண்மனைகளில் ஏராளமானபட்டயச் சான்றுகளும், இலக்கியச் சான்றுகள் இருந்தும் தாங்கள் தான் ஈரோடு கோட்டையை கட்டியதாக பட்டக்காரர், மன்றாடியார் கூறவில்லை.

எனவேதான், ஈரோட்டு வரலாற்றில் குறிப்பாக செங்குந்தர்கள் வரலாற்றில் சந்திரமதி முதலியாரின் கல்வெட்டு முக்கியத்துவம் பெறுகிறது.

ஈரோட்டை ஆண்ட மன்னர் செங்குந்தர் மரபினரான சந்திரமதி முதலியார் என்பவரே என்றும் நிரூபணமாகிறது.

1650-ல் ஈரோடு கோட்டை, மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் என்ற மன்னரால் புதுப்பிக்கப்பட்டது; பிறகு கோட்டை மைசூர் மன்னன் திப்பு சுல்தான் கைக்கு மாறியது; 1790-ல் மெட்டோஸ் என்ற ஆங்கிலேயே தளபதி ஈரோடு கோட்டையை கைப்பற்றினான் ஆங்கிலேயர் ஆட்சி ஈரோட்டில் ஏற்பட்டது. 1878-ல் ஈரோட்டிலிருந்த கோட்டை இடிக்கப்படடது.

நானும் ஒரு சாட்சியாகிறேன் :

நான் ஈரோட்டில் வெளியூரிலிருந்து குடியேறிய செங்குந்தர் குடும்பத்தில் ஒருவன்; நான் பிறந்த ஆண்டு 1928.

சந்திரமதி முதலியார் ஆண்ட 300 ஆண்டு கழித்து ஈரோட்டில் பிறந்த நான், எனது சிறு வயதில் ஈரோடு முழுவதும் சுற்றிஅறிந்திருந்தவன். காடுமேடு, பாறை அத்துப்பபடி.

வ.உ.சி. பூங்கா, காடு நிறைந்த பகுதி; அதில் (மிருகக்காட்சிசாலை உள்ளபகுதி) உள்பகுதியில் ஆங்கிலேய அதிகாரியின் பங்களா இருந்தது.

சந்திரமதி முதலியார் கல்வெட்டு சாசனம் :

ஈரோடு சிதம்பரனார் பூங்காவிலுள்ளபாறை ஒன்றில் கீழ்க்கண்ட கல்வெட்டு உள்ளது.

"விபவ வருஷம் கார்த்திகை பஞ்சமி
(கி.பி. 1628) புண்ணியம் சந்திரமதி முதலியார்
-மடத்துக்கு
புன்செய் இந்த தர்மத்தை ஆதிக்கம் பண்ணியவர்கள்

கங்கைக் கரையில் காறாம் பசுவை கொன்ற தோஷத்தில்சேர்வர்" எனவே, 1628-ல் சந்திரமதி முதலியார் ஈரோட்டை மன்னராக ஆட்சி செய்த போது, தற்போது வ.உ.சி பூங்கா நூறு ஏக்கருக்கு மேல் உள்ள சோலைசூழ்ந்த இந்த இடத்தை செங்குந்தர்கள் மடம் கட்டிக் கொள்வதற்காக மானியமாக அளித்துள்ளார். அந்த இடம் கைமாறிப் போய்விட்டது !

சந்திரமதி முதலியாரின் நினைவாக :

ஈரோட்டில் செங்குந்த சமூக மக்கள் பெருமளவில் வாழ்ந்த இடம், செங்குந்தர் கல்யாண மண்டபம் உள்ள பகுதியாகும் இதைச்சார்ந்த தெருவுக்கு செங்குந்தர் வீதி என்றே பெயர் இருந்தது. (தற்போது கண்ணகி வீதி) கைக்கோளன் தோட்டம் என்ற பெயர் இன்னும் ஈரோட்டில் ஒரு பகுதிக்கு வழங்கி வருகிறது.

தற்போதைய சத்திரோட்டில் முத்துசாமி முதலி வீதி தொடங்குகிறது. பிறகு செங்குந்தர் வீதி, தொடர்ச்சியாக சீரங்க முதலி வீதி, கைக்கோளர் தோட்டம் இவைதான் கோட்டையைச் சார்ந்த தெருக்கள் அப்போது வேறு தெருக்கள் இந்தப் பகுதியில் இல்லை இவை அனைத்திலும் வாழ்ந்தவர் செங்குந்தர்களே.

ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோயிலைக் கட்டிய

சிறு நல்லாள், பெரு நல்லாள் வரலாறு

ஈரோடு. **எம். மாரிமுத்து,** பி.ஏ.பி.காம்., எச்.டி.சி.
டிப்-இன்-இந்தி

சாமான்ய குடிமகள் கட்டிய கோயில் :

சாமான்ய குடிமகள் கட்டிய கோயில் தமிழகத்தில் இது ஒன்றுதான் என்ற சிறப்பைப் பெறுவது. பெரியார் மாவட்டம், ஈரோடு கோட்டைப்பகுதியில் அமைந்துள்ள ஈரோடு கோட்டை 'ஈஸ்வரன் கோவில்' என அறியபட்ட "அருள்மிகு திருத்தொண்டீஸ்வரர் திருக்கோவிலா"கும். இந்த கோயில் இன்றிலிருந்து 800 ஆண்டுகளுக்குமுன் அதாவது, கி.பி.1200-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இப்போது இந்தக்கோவிலுக்கு அரசாங்கத்தாரால் சூட்டப்பட்ட பெயர் 'ஆருத்ரகபாலீஸ்வரன் கோவில்' என்பதாகும்.

இந்தக் கோயிலைக் கட்டியவர் பெண்கள் இருவர்; சகோதரிகளான அவர்கள் பெயர் சிறுநல்லாள், பெருநல்லாள் என்பதாகும்.

ஆதாரங்கள் :

1. கொங்கு மண்டல சதகம் :

கி.பி. 1200 நூற்றாண்டில் வாழ்ந்தவர் வாலசுந்திரக் கவிஞர் என்பவர். இவர் பாடிய நூல் 'கொங்கு மண்டல சதகம்' என்பது. இந்த நூலுக்கு உரை எழுதியவர், வித்துவான் வே.ரா தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்கள். இந்த நூலில் கொங்குமண்டலத்திலுள்ள முக்கியமான ஊர்களைப் பற்றி பாடப்பட்டிருக்கிறது. அதில் 'ஈரோடு' என்ற ஊரைக் குறிப்பிட்டு ஒரு பாடல் வருகிறது.

அதில் பாடல் 5-ல் ஊரின் பெயர் 'ஈரோடை, என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், 'திருஎழின்மிக்கார் இருவர்' என்று இரு பெண்களை கவிஞர் குறிப்பிடுகிறார்.

இதற்கு விளக்கம் அளிக்க வந்த உரையாசிரியர், (அந்த நூலின் பக்கம் -20-ல்) இருவோர் என்ற சொல்லுக்கு சிறுநல்லாள், பெருநல்லாள் என்ற பெயரைக் குறிப்பிடுகிறார்.

இது வரலாறு ; கட்டுக்கதையல்ல

மேலும் (பக்கம் -23-ல்) - இதை வரலாற்று குறிப்பு என்று உரையாசிரியர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். 'வரலாறு' என்று உரையாசிரியரே சொல்வதனால் இந்தஇருசகோதரிகள் வாழ்ந்ததும் இந்து கோயிலில் வழி பட்டதும் இந்தக் கோவிலை அவர்களே கட்டியதும் உண்மைச் சம்பவம் என்றாகிறது.

"முன்பொரு காலத்தில் சின்னநல்லாள் பெரிய நல்லாள் என்னும் கனிகை குலக் கன்னியர் இருவர், ஈரோட்டிலுள்ள தொண்டீஸ்வரரை வழி பட்டுக் கொண்டு..." என்ற அந்த நூலில் (பக்கம்-23-ல் கூறப்படுகிறது.

ஆதாரம் : 2

கல்வெட்டு ஆதாரம் :

அருள்மிகு திருத்தொண்டீஸ்வரன் கோயிலைக் கட்டியவர்கள் பெண்கள் இருவர்; அதுவும் கன்னியர்; கனிகையர் குலத்தவராயிருந்தும் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள்.

கோயிலை அந்த இருபெண்கள் நிர்மானித்த தொடக்ககாலத்தில் 8x8 அடி அளவில் (கர்ப்பகிரகம்) கருவறையும்; அதைச் சேர்ந்தார்போல கிணறும்,

கொடிமரமும், சுற்றுமதில் சுவரும் இந்த நான்கு மட்டும் தான் இருந்திருக்கிறது மற்ற மண்டபங்கள் பிற்காலத்தில் பலரால் அவ்வப்போது கட்டி விரிவாக்கப்பட்டிருக்கிறது இந்த கோயிலில் தொடக்க காலத்தில் ஈஸ்வரமூர்த்தி மட்டுமே இருந்தது; அம்மன் சிலை உட்பட மற்றவர்கள் சிலை மற்றவர்களால் பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறது.

கொடிமரத்தில் மறைத்த கொடுமை :

கோயில் கொடிமரம் அமைத்தவர்களும் இந்த பெண்கள் இருவரும் தான். அந்தகொடிமரத்தின் அடிப்பாகச் சுற்றுக் கட்டுமானம் கல்லால் ஆனது; ஒருவித வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த கொடிமரப்பகுதியில்

'இந்த கோயிலை கட்டியவர்கள்
சிறுநல்லாள், பெருநல்லாள்'

என்று கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது.

அதை மறைத்து 30-4-79 ம் ஆண்டில் அந்தக் கொடிமரம் அடிப்பகுதியில் தாமிரத் தகட்டினால் திருத்தொண்டர்கள் மூடி மறைத்து விட்டார்கள். கோவிலைக் கட்டியவர்களை மறந்துவிட்டாலும் பரவாயில்லை; அவர்களை பெயரைச் சொல்லும் கல்வெட்டையும்கூட மறைத்துவிட்டது கொடுமையான காரியமெனக் கருதப்படுகிறது.

கடவுளுக்கு காரணப்பெயர் :

தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில் எதிலும் 'திருத்தொண்டீஸ்வரர்' என்ற பெயர் கிடையாது. திருமறை எதிலும், புராணங்கள் எதிலும் ஈஸ்வரனுக்கு, தொண்டீஸ்வரர் என்ற பெயரில்லை

ஈரோடு கோட்டைப் பகுதியில் சிறுநல்லாள், பெருநல்லாள் என்ற இரு கன்னிப் பெண்கள் கட்டிய

24

கோயில் உள்ள ஈஸ்வரனுக்கு மட்டுமே 'தொண்டீஸ்வரர்' என்ற பெயர் உள்ளது.

ஏதேதோ காரணத்திற்காக கோயிலை கட்டுவார்கள்; இந்த கட்டுரையில் அதை விவரிக்க இடமில்லை. கோயிலைக் கட்டியவர் சாதாரண பெண்களாகவும் இருந்தும் அதே கோயிலுக்கு தொண்டு செய்து வழிபட்ட சிறப்பு இந்தக் கோவிலுக்கு மட்டும்தான் உண்டு.

அந்த இரு பெண்கள் 'தொண்டு' செய்து வந்த காரணத்தால் தான், கோவிலில் உள்ள கடவுளுக்கும் 'தொண்டீஸ்வரர்' என்று பெயர் வழங்கி வருகிறார். கோயிலைக் கட்டியவர்களும் பெண்களிருவரே; அந்தக்கோவில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்குப் பெயர் வந்ததும் அவர்கள் செய்த தொண்டினாலே தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்...3

என்னைப் பற்றி சொல்ல அனுமதியுங்கள் :

நான் நெசவாளர் குலத்தில் பிறந்தவன்; சிறு வயதில் நெய்தவன். 1928-ம் ஆண்டு திருத்தொண்டீஸ்வரர் கோவில் மேற்கு சுவரை ஒட்டிய தென்வடலாகச் செல்லும் சீரங்க முதலி வீதியில் கோயிலுக்கு நேர்பின்புறம் உள்ள வீட்டில் பிறந்தவன். ஈரோட்டில் தறியேறி நெசவுத் தொழில் செய்த மூத்த குடிமகனில் நானும் ஒருவன். ஏறக்குறைய 1940-ம் வருடம் வரை நான் இந்த கோவிலிலேயே சிறுவனாக இருந்த காலந்தொட்டு வாழ்ந்தவன் என்று சொல்லிக்கொள்கிற அளவுக்கு நானும் எனது நண்பர்களும் கோயில் அர்ச்சகர்களுக்கும்; திருவிழாக் கால மற்ற கைங்கரியங்களுக்கு உதவிசெய்து வந்தோம். அப்போதைய மூத்த அர்ச்சகர்கள் யாரும் இப்போதில்லை.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த காலக் கட்டத்தில் கோயில் இருந்த நிலை தெரிந்தவன்;

அன்றாடம் ஒருவர் வழிபட்டுவருவதே அபூர்வமாயிருந்த காலம் இந்தக் கோயிலின் மூலை முடுக்கெல்லாம் அறிந்தவன்; அமைப்பு எப்படி இருந்தது; எந்தெந்த சிலைகள் எங்கெங்கு இருந்தன; நவக்கிரகங்கள் எத்தனை தடவை இடம் மாறியது என்பது தெரிந்தவன்.

சிறுநல்லாள், பெருநல்லாள் சிற்பத்தைக் காண வாருங்கள் :

கோவிலின் உட்பிரகாரச் சுவரில் எந்த இடத்திலும் எந்த சிற்பமும் கிடையாது. மாடம் கூட இல்லை.

வெளிப் பிரகாரச் சுற்றுச் சுவரைப் பார்ப்போம் வாருங்கள்; சுவரின் கிழக்கு, தெற்கு மேற்கு பகுதிகளில் சுவற்றில் எந்த ஒரு சிற்பமும் இல்லை.

வடக்கேயுள்ள மதிற்சுவரின் வெளிப்புறத்தில் மூன்று சிற்பங்களைக் காணலாம்.

1) அம்மனின் சிற்பம்
2) அனுமனின் சிற்பம்
3) இந்த ஸ்ரீ அனுமான் சிற்பத்திற்கு பக்கத்தில் 5 அடி தூரத்தில் ரோடு மட்டத்தில் ஒரு சிறிய சிற்பத்தை காண்பீர்கள்

இரண்டுபெண்கள் தலை குனிந்து வணங்குவது போன்று ஒரு சிற்பம் இருக்கிறது.

இந்த சிற்பத்தில் இருப்பவர்கள் தான் திருத் தொண்டீஸ்வரர் கோயிலைக் கட்டியவர்களான சிறிய நல்லாள், பெரிய நல்லாள் என்ற அந்த இரு சகோதரிகளாகும்.

நிரூபிக்கப்படுகிறது :

வாலசுந்தரக் கவிஞர் பாட்டில் வரும் 'பெண்ணிருவர்' என்ற வரியையும் கொடிமரத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும், இந்த சிற்பத்தையும் இணைத்துப் பார்க்கும்போது அந்தசிற்பத்தில் இருப்பவர்களை

26

சிறிய நல்லாள், பெரியநல்லாள் என்று ஆதாரபூர்வமாக அடையாளம் காட்ட முடிகிறது.

இறைவனின் திருப்பெயர் :

காஞ்சிபுரம், காஞ்சி சங்கர மடத்தின் ஆஸ்தானப் புலவரான பு.மா.செந்தில்நாதன் என்பவர் "திருமறைத்தலங்கள்" என்று ஒருநூல் எழுதியிருக்கிறார் (பதிப்பு -1985). அதில் திருமறைத்தலங்களைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் விரிவாகத் தரப்பட்டுள்ளது அந்தந்த கோவிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன், இறைவியின் பெயர்; தல விருட்சம், தீர்த்தத்தின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புத்தகத்தில் 'திருத்தொண்டீஸ்வரர்' என்ற பெயர் கொண்ட இறைவன் எந்தக்கோயிலிலும் இல்லை.

ஆதாரம் :4

சன்னதியின் வாசலில் :

திருத்தொண்டீஸ்வரர் சன்னதிக்கு நுழையும் இடத்தில் ஒரு வாசல் இருக்கிறது. அது செப்புத்தகடால் அலங்கரிக்கப்பட்டு மூடப்பட்டுள்ள வாசலாகும். அந்த வாசலின் வலப்பக்கம் மேல் பகுதியில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.

"திருத்தொண்டீசர்"

"பெரு நல்லாள்; சிறுநல்லாள்"

"வழிபடுகின்றனர்"

இந்த வாசகங்களுக்கு இடையே ("எழின் மிக்கார் இருவோர்") பெருநல்லாள், சிறுநல்லாள் ஆகிய இரு பெண்களின் முழு உருவச் சிற்பம் இருக்கிறது. கல்லில் வடித்த சிற்பத்தின் மீது செப்புத்தகடு பொருத்தப்பட்டு, சிற்பங்கள் அழகாக காட்சியளிக்கின்றன. இந்த மங்கையர்தான் திருத்தொண்டீசுவரர் கோயிலைக் கட்டியவர்களாகும்.

வணக்கத்துக்குரியவர்கள் மறக்கப்படுகிறார்கள் :

அரசர்களோமற்ற செல்வந்தர்களோ இந்தக் கோயிலைக் கட்டியிருந்தால் பெரிய சிலையாக எல்லோர் மரியாதையைப் பெறும் வழியாக கோவிலுக்குள்ளே சிலை வைத்திருப்பார்கள்.

அடியார்களின் கால்தூசி படும்படியான உயரத்தில் தங்களின் சிற்பத்தை தாங்களே அமைத்திருக்கும் பெருந்தன்மை வியப்பளிப்பதாக உள்ளது.

அல்லது கோவிலுக்கு உள்ளே தங்கள் சிற்பத்தை அமைத்திருந்தால் பிற்காலத்தில் யாராவது ஓசைப்படாமல் அதை அப்புறப்படுத்தி விடக்கூடும்; என்னே! பொதுமக்கள் பார்வையில் படும்படியான இடத்தில் அமைத்திருப்பது அந்த இரு பெண்களின் மதிநுட்பத்தை காட்டுகிறது.

சிற்பத்தை காப்பாற்றுங்கள் :

800 ஆண்டு பழமையான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த சிற்பத்திலுள்ளவர்கள் மரியாதைக் குரியவர்கள். எனவே, கோயிலில் நடக்கும் ஏதாவது ஒரு விழாவின் சமயத்தில் இந்த சிற்பத்திற்கும் மரியாதை செய்யும் சம்பிரதாயத்தை ஏற்படுத்தி நாம் நன்றிக்கடன் உடையவர்களென வெளிப்படுத்த வேண்டும்.

இந்த சிற்பத்தை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை செய்து, திருத்தொண்டீஸ்வரர் கோயிலை கட்டியவர்களை காலமெல்லாம் நிலைத்திருக்குமாறு செய்வதற்கு, அவர்களுடைய வரலாற்றையும் காலத்தையும் சுருக்கமாக ஒரு கல்வெட்டில் செதுக்கி, அந்தச் சிற்பத்திற்கு அருகில் பொருத்தமான இடத்தில் பதிக்க வேண்டுமென்பது அனைவரின் விருப்பமாக இருக்கிறது.

நிறைவு பெறுகிறது.

எம். மாரிமுத்து

ஆதாரமான நூல்கள் :

1. **புராணம்**
கந்தசாமி கவிராயர் பாடியது - பதிப்பு 1907.
சி. வெள்ளையக் கவுண்டர் பொருளுதவியுடன்
வெளியிடப்பட்டது.

2. கொங்குநாடும் தமிழும் - புலவர் அ.மு. குழந்தை
பதிப்பு - 1956.

3. கொங்கு நாட்டு வரலாறு - மயிலை
சீனி. வெங்கடசாமி பதிப்பு - 1978
பொள்ளாச்சி நா. மகாலிங்க கவுண்டருக்கு
இந்நூல் காணிக்கையாக்கப்பட்டிருக்கிறது.

4. கொங்கு வேளாளர் வரலாறு - செல்வி
டி.கே. சக்திதேவி, எம்.எஸ்.சி., எம்.பில்., எழுதியது.
பதிப்பு - 1978, சங்கராண்டாம் பாளையம்
பட்டக்காரர் பெரியண்ண வேணாவுடையாக்
கவுண்டருக்கு இந்நூல் காணிக்கையாக்கப்பட்டது.

5. கொங்கு மண்டல - வாலசுந்தரக் கவிஞர்
பாடியது. உரையாசிரியர் : வித்வான்
வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர். பதிப்பு : 1971.

6. அருள்மிகு திருத்தொண்டீஸ்வரர் திருக்கோயில்
திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா.
-சிறப்பு மலர் - 30-4-1979.

7. அபிதான சிந்தாமணி
ஆ. சிங்காரவேலு முதலியார், பதிப்பு : 1899.

8. ஈரோடு நகராட்சியிடமுள்ள ஆதாரங்கள்;

9. சுபமங்களா மாத வெளியீடு - மே 1995.

10. திருமலை நாயக்கர் வரலாறு -
அ.கி. பரந்தாமனார், எம். ஏ.,

11. 'கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்' என்ற தலைப்பில் 1975-ல் "வியாரெம்" என்ற பெயரில் 'தினமலர்' நாளிதழில் வெளிவந்த கட்டுரைகள்

12. இராமப்பையன் அம்மானை - 1950.

13. கோ.ம. இராமசந்திரன் செட்டியாரின் 'கொங்குநாட்டு வரலாறு' - பதிப்பு 1987.

14. கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம் பதிப்பு - 1928.

15. ஈரோடு நகராட்சி நூற்றாண்டு விழா மலர்.

....

ஆசிரியரின் பிற நூல்கள் :

நாடகம் :

1. சலனமா ? சாகசமா ?
2. வைரமோதிரம்.

சிறுகதை :

3. மாமுவின் மணிக்கதைகள்.

காப்பியங்கள் :

4. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அந்தாதி
5. செங்குந்தர் காவியம்

கைத்தறி நெசவுத் தொழில் பற்றிய நூல்கள் :

6. சென்னை ராஜ்யத்தில் கைத்தறி நெசவுத் தொழில்
7. இலகு கணிதம்
8. செஸ்திட்டங்களும் கைத்தறி நெசவாளர்களும்
9. கைத்தறி - கேள்வி பதில்
10. உங்கள் தீர்ப்பு என்ன ?
11. கைத்தறியின் கதி என்ன ?

அம்மானை

மாவடியிலே விளங்கும் வல்லிகா மாட்சித்தாய்
சேவடியிலே உதித்தார் செங்குந்தர் அம்மானை
சேவடியி லேஉதித்தார் செங்குந்தர் ஆமாயின்
பாவடியி னிற்று பசப்புவதேன் அம்மானை
பசித்தவருக் கன்னமிடப் பசவாரோ அம்மானே

மாவடியில் வீற்றிருக்கும் (திருவேகம்பப் பெருமானின் இடப்பாக அமர்ந்த) காமாட்சியம்மையின் திருவடிச் சிலம்பில் உதித்தவர் செங்குந்தர்களாவர். அம்மானை செங்குந்தர்கள் திருவடிச் சிலம்பில் (சேவடியில்) உதித்தவர்கள் என்றால் அவர்கள் பாவடியில் (பாவு தோயும் இடத்தில்) இருந்து இரங்குவது ஏன்? அம்மானை பசித்தவர்களுக்கு உணவிடுபவர் இரங்காரோ? (இரக்கம் காட்ட மாட்டார்களா?) அம்மானை (பசப்புவது - இரக்கம் காட்டுவது)

கீழேவரும் பாடல் 'போகர்' என்னும் சித்தரால் இயற்றப் பட்டது எனவும், அவர் 'புலிப்பாணி' என்னும் சித்தருக்கு இதனைக்கூறினார் எனவும் வழங்கப்படுகிறது.

பண்பான புலிப்பாணி மைந்த கேளு
   பகருகின்றேன் நவவீரர் வருக்கத் தானே
நண்பான சிவசக்தி சிலம்பில் தோன்றித்
   தருவாக நந்திகணத் தவருமாகித்
திண்பான் செங்குந்தர் வமிசமானார்
   திடமுள்ள வளவகுல மணமே சூட்டி
எண்பான சகத்திர நூற்றொன்பான் பாலர்
   இணங்கியே உலகிலர் சியற்றினாரே
      (வளவகுலம் - சோழர் மரபு)

நவ வீரர் மரபினை நான் கூறுகின்றேன் - அதனைப் புலிப்பாணியே நீ கேட்பாயாக சிவசக்தியின் சிலம்பின் மணிகளிலிருந்து அவதரித்து, நந்தி தேவர் வழியில் வந்து கையில் குந்தப்படை ஏந்தியதனால் "செங்குந்தர்" என்று இவர்கள் வழங்கப்பட்டனர். சோழ குலத்தில் இவர்கள் மணம் கொண்டு, இலக்கம் வீரர்களுடன் நவ-வீரர்களும் இணைந்து உலகினை ஆட்சி செய்தார்கள்.

வாழ்த்து

கார்வாழி வாழி கலைமகள் வாழி கனகமயில்
கூர்வேலஞ் சேவற் கொடிவாழி வாழி குகனிருதாள்
சீர்வாழி வாழிதவயானை வள்ளி சிறந்த கச்சி
ஊர்வாழி செங்குந்த வேலவா வாழி உலகெங்குமே.

கார் - மழை : கனகம் - பொன் : சீர்-புகழ்.

சோணாட்டு முதலியெனச் சொலவந்த
செங்குந்தத் தொகுதி வாழி
நாணாளும் அவர் செய்த நற்றருமம்
இத்தரைமேன் நன்கு வாழி
காணாத காட்சியெலாங் காட்டியருள்
கந்தப்பன் கருணை வாழி
மாணாரும் வடிவேலும் மயிலும் இரு
மாதர்களும் வாழி வாழி,
வேலும் மயிலும் துணை.

32


வெற்றிவேல்
வீரவேல்
செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
வீரதீர செங்குந்தர்
வீராந்தக செங்குந்தர்
வீரமார்த்தாண்ட செங்குந்தர்
வீரராக்கத்த செங்குந்தர்
வீரபாகு செங்குந்தர்
வீரகேசரி செங்குந்தர்
வீரமகேந்திர செங்குந்தர்
வீரமகேசுவர செங்குந்தர்
வீரபுராந்தக செங்குந்தர்
முருகப் பெருமானின் போர்ப்படைத் தளபதிகள்
வீரபாகு உள்ளிட்ட செங்குந்த கைக்கோள நவவீரர்கள்